2

# விசுவாச விலக்கம்: அதன் காரணம் மற்றும் சிகிச்சை

## (3:1-4:13)

*எபிரெயருக்கு எழுதிய நிருபம், புறம்பே விழுந்து போவதலில் இருந்து கிறிஸ்தவர்களின் குழு ஒன்றைக் காப்பதற்காக எழுதப்பட்டது (எடுத்துக்காட்டாக காண்க 2:1; 6:4-6; 10:26-31). எபிரெயர் 3 மற்றும் 4 அதி காரங்களில், எழுத்தாளர் கருத்தைச் சரியாகத் தந்தார். அவர் விசுவாச விலக்கம் என்ற பாடக்கருத்தின் மீது பிரசங்கம் ஒன்றைப் பிரசங்கித்தார். அவரது வாசகர்களுக்கு அந்தப் பிரசங்கம் தேவைப்பட்டது; நமக்கும்கூட அது தேவைப்படுகிறது. புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில், பல கிறிஸ்தவர்கள் விழுந்து போனார்கள் மற்றும் இன்றைய நாட்களிலும் பல கிறிஸ்தவர்கள் விழுந்து போகின்றனர். சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிபவர்களில் 50 சதவிகிதம் அல்லது அதற்கும் மேற்பட்டவர்கள் கிறிஸ்துவை விட்டு புறம்பே விழுந்து போகின்றனர் என்று சிலர் கணக்கிட்டுள்ளனர். விசுவாச விலக்கம் என்பது அப்போது ஒரு பிரச்சனையாக இருந்தது, அது இன்னமும் ஒரு பிரச்சனையாகவே இருக்கிறது. இந்தப் பிரச்சனை எவ்வாறு தீர்க்கப்பட முடியும்? அந்தக் கேள்விக்கு, எபிரெயர் 3 மற்றும் 4 ஆகிய அதிகாரங்கள் பதில்கள் சிலவற்றை அளிக்கின்றன.*

*இந்தப் பாடத்தில் நாம், எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் பிரசங்கித்த பிரசங்கத்தை ஆய்வு செய்யவும் பின்பு அது நமக்கு எவ்வாறு நடைமுறைப் படுகிறது என்று கேட்கவும் விரும்புகிறோம்.*

### பிரசங்கம்

**அறிமுகம்**

பிரசங்கமானது பின்தொடரும் உரையாடலுக்கு மேடை அமைக்கும் ஒரு அறிமுகத்துடன் தொடங்குகிறது. எபிரெயர் 3:1-6ல் நாம் அந்த அறிமுகத்தைக் காணுகிறோம். (வசனப்பகுதியை வாசிக்கவும்.)

இவ்வசனங்களில் எழுத்தாளர், மோசேயையும் கிறிஸ்துவையும் ஒப்பிடும் ஒரு பிரசங்கத்திற்குத் தமது வாசகர்களைத் தயார் செய்வித்தார். மோசேயும் கிறிஸ்துவும் ஒப்பிடப் படமுடியும் என்றால், மோசேயினால் வழிநடத்தப்பட்ட இஸ்ரவேல் மக்களும் கிறிஸ்துவினால் வழிநடத்தப்படும் சபையும் கூட ஒப்பிடப்பட முடியும் என்பதே மறைமுகமான கருத்தாக உள்ளது.

எழுத்தாளர், "நாம் அறிக்கைபண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்" என்று கூறி இதைத் தொடங்குகிறார் (3:1). இயேசு ஒரு "அப்போஸ்தலராக" இருக்கிறார்,

அதில் அவர் தேவனுடைய செய்தியை மனிதருக்குக் கொண்டுவரும் தேவனுடைய செய்தியாளராக இருக்கிறார். நமது "பிரதான ஆசாரியர்" என்ற வகையில் அவர், நமது தேவைகளைத் தேவனிடத்திற்குக் கொண்டு சென்று நமக்காகத் தேவனிடத்தில் பரிந்து பேசுகிறார்.

மேலும் நாம், கிறிஸ்து மோசேயைப் போல் இருக்கிறார், அதிலே அவர்கள் இருவரும் உண்மையுள்ளவர்களாக இருந்தனர். இருப்பினும், வீட்டைக் கட்டியவர் தாம் கட்டுகிற வீட்டைக் காட்டிலும் பெரியவராக இருப்பது போல (3:2, 3). மோசேயைக் காட்டிலும் அவர் [இயேசு] பெரியவராக இருக்கிறார். மோசே ஒரு ஊழியக்காரர் என்ற வகையில் உண்மையானவராக இருந்தார், அதேவேளையில், கிறிஸ்து உண்மையுள்ளவராக அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவரான குமாரனாக இருக்கிறார் (3:5, 6அ).

இஸ்ரவேல் மக்கள் தேவனுடைய வீடாக இருந்தது போன்றே, இன்றைய நாட்களில் நாம் தேவனுடைய வீடாக இருக்கிறோம் (3:6ஆ). இந்தக் காரணத்தினால், இஸ்ரவேல் மக்களின் சூழ்நிலை நமக்கு அர்த்தம் நிறைந்ததாக உள்ளது.

**வசனப்பகுதி**

அடுத்ததாக எழுத்தாளர், தமது பிரசங்கத்திற்கான வசனப்பகுதியை ஒப்புவித்தார், இது சங்கீதம் 95:7-11ல் இருந்த எடுக்கப்பட்டதாகும். (எபிரெயர் 3:7-11ஐ வாசிக்கவும்.)

**நோக்கக் கூற்று**

எழுத்தாளர் வசனப்பகுதியை வாசித்த பின்பு, தமது பாடத்தின் நோக்க வாக்கியத்தை அல்லது ஆய்வுரையை எடுத்துரைத்தார். (எபிரெயர் 3:12-14ஐ வாசிக்கவும்.) இந்தச் சில வார்த்தைகளில் அவர், தமது வாசகர்கள் செய்யும்படி நம்பி இணங்கத் தாம் விரும்பியதைக் குறிப்பிட்டார். விசேஷமாக 13ம் வசனத்தைக் கவனிக்கவும். இவ்வசனத்தில் உள்ள ஒவ்வொரு சொற்றொடரும் முக்கியமானதாக உள்ளது.

"உங்களில் ஒருவனாகிலும்": நாம் உதவ முடியும் என்றால், எந்த உறுப்பினரும் -ஒருவராகிலும் - விழுந்துபோக அனுமதிப்பதற்கு நாம் மனவிருப்பமாக இருக்கக் கூடாது.

''பாவத்தின் வஞ்சனையினாலே'': இந்தச் சொற்றொடர் பாவத்தின் இயல்பை நன்கு விவரிக்கிறது. பாவம் வஞ்சனையுடையதாக உள்ளது. அது ஜீவனை வாக்களிக்கிறது, ஆனால் மரணத்தைத் தருகிறது!

''கடினப்பட்டுப் போகாதபடிக்கு'': பாவத்தில் தொடருதல் என்பது இருதயத்தைக் கடினப்படுத்தும். விஷயம் அப்படி இருப்பதால் நாம், அன்றாடம் புத்திமதி மற்றும் ஊக்குவித்தல் ஆகியவற்றைக் கொடுத்து பெற வேண்டியது அவசியமாக உள்ளது.

"இன்று என்னப்படுமளவும் நாடோறும்"[1]: நாம் வாரம் ஒருமுறை சபையாகக் கூடிவரும்போது மாத்திரம் அல்ல, ஆனால் ஒவ்வொரு நாளிலும் ஊக்கம் அளிப்பது அவசியமாக உள்ளது. கிறிஸ்தவம் என்பது "ஒன்றுகூடியிருத்தலின்" மார்க்கமாக உள்ளது; கிறிஸ்தவர்கள் ஒருவர் மற்றவருடன் அன்றாடம் இணைவைப் பராமரிக்க வேண்டும்.

*"ஒருவருக்கொருவர்": கிறிஸ்தவம் என்பது "ஒருவர் மற்றவருக்கு" மார்க்கமாக உள்ளது. நாம் உண்மைநிறைந்தவர்களாக இருந்தால், மற்றவர்கள் உண்மை நிறைந்தவர்களாக நிலைத்திருக்க உதவுதல் பற்றி நாம் அக்கறை கொண்டிருக்க வேண்டும்.*

*"புத்திசொல்லுங்கள்": இங்கு நாம், வாய்மொழி ஊக்குவித்தலைக் காணுகிறோம் - இது நாம் இருக்க வேண்டிய பிரகாரம் இருப்பதற்கும் செய்ய வேண்டியவற்றைச் செய்வதற்கும் நம்மை வேண்டிக் கேட்டுக்கொள்ளும் மகிழ்வு நிறைந்த வார்த்தைகளாகும். நாம் உண்மையுள்ளவர்களாக நிலைத்திருக்க இப்படிப்பட்ட ஊக்குவித்தல் தேவைப்படுகிறது.*

*நாம் ஏன் அன்றாடம் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக் கொள்ள வேண்டும்? இந்தப் பாடத்தில் ஒரு "ஆகில்" இருப்பதைக் கவனியுங்கள்: "முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில்" நாமே அவருடைய வீடாயிருப்போம் (3:6). "நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில், கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம்" (3:14). நாம் நமது மார்க்கத்தை உறுதியாய்ப் பற்றிக்கொள்ளத் தவறினால், நாம் விழுந்துபோவோம். அந்த உண்மை நாம், "இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்திசொல்"வதற்குக் காரணமாக வேண்டும்.*

### [**பிரசங்கத்தின்**] **பொருள் பகுதி**

*நோக்க வாக்கியத்திற்குப் பின்பு பிரசங்கத்தின் பொருள் பகுதி வருகிறது. பிரசங்கத்தின் பிரதான பகுதியான பொருள், பகுதியில் எழுத்தாளர் இரண்டு விஷயங்களைச் செய்கிறார். முதலாவது அவர், இஸ்ரவேல் மக்களால் அமைக்கப்பட்டிருந்த விசுவாச விலக்கத்தின் உதாரணத்தை முன்வைத்தார். இரண்டாவது அவர், தமது வாசகர்கள் அந்த உதாரணத்தைப் பின்பற்றாது இருக்கும்படி வேண்டிக் கேட்டுக்கொண்டார்.*

*விசுவாச விலக்கத்தின் செயல்விளக்கம் என்ற வகையில் இஸ்ரவேல் மக்கள். (3:15-19ஐ வாசிக்கவும்.) இவ்வசனப் பகுதியில் எழுத்தாளர், "அவர்கள் எனக்குக் கோபமூட்டினார்கள்" என்று வசனப்பகுதி கூறும் உண்மையைக் கொண்டு தொடங்கினார் (3:15). பின்பு அவர், எகிப்தில் இருந்து வெளியேறி வந்த இஸ்ரவேல் மக்கள்தாம் தேவனுக்குக் கோபமூட்டியவர்களாக இருந்தனர் என்று கூறியதன் மூலம், தாம் மேற்கோள் காண்பித்திருந்த விஷயத்தை விரிவாக்கப்படுத்தினார். இதன் விளைவாக அவர்கள் வனாந்தரத்தில் இறந்தனர் மற்றும் அவர்களின் கீழ்ப்படியாமை மற்றும் அவிசுவாசம் ஆகியவற்றின் காரணமாக (3:16-19), அவர்கள் "அவரது இளைப்பாறுதலில்" பிரவேசிக்கவில்லை (அதாவது, அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிற்குள் பிரவேசிக்கவில்லை; வசனம் 11). ஒரு முழு சந்ததியே தங்கள் பாவத்தின் காரணமாக வனாந்தரத்தில் அழிந்து போயிற்று.*

*வாசகர்களுக்கு வசனப்பகுதியின் நடைமுறைப் பயன்பாடு. (4:1-11ஐ வாசிக்கவும்.) 4ம் அதிகாரத்தில் அடுத்த பகுதியானது தோற்றகால வாசகர்களுக்கு வசனப்பகுதியின் நடைமுறைப் பயன்பாடாக உள்ளது. இவ்வசனப்பகுதி, "அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவாக வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க" என்ற வார்த்தைகளுடன் தொடங்குகிறது. நம்மைப்*

போலவே இஸ்ரவேல் மக்களும், தங்களுக்கு "நற்செய்தி" பிரசங்கிக்கப்பட்டதைக் கொண்டிருந்தனர் என்ற கருத்தை எழுத்தாளர் ஏற்படுத்தினார். இருப்பினும் அவர்கள் தங்கள் அவிசுவாசத்தின் காரணமாக, தாங்கள் பெற்றுக்கொண்ட வாக்குத்தத்தங்களில் இருந்து பயன் அடையவில்லை (4:2).

இஸ்ரவேல் மக்கள் ஒரு இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கவில்லை என்பதால், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இளைப்பாறுதல் இனி நிறைவேற்றப்பட வேண்டியதாக எஞ்சியிருக்க வேண்டும். படைப்பின்போது தொடங்கிய (4:3, 4) மற்றும் தேவன் தாவீதின் மூலமாகப் பேசியபோது இன்னமும் நிலவி-யிருந்த (காண்க எபிரெயர் 4:5) தேவனுடைய இளைப்பாறுதலைப் பற்றி தேவன் சங்கீதம் 95ல் பேசினார். மோசே, யோசுவா ஆகியோருக்குச் சுமார் நானூறு ஆண்டுகளுக்குப் பின் வாழ்ந்திருந்த தாவீது, கிறிஸ்துவுக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக, தேவனுடைய இளைப்பாறுதலில் சிலர் பிரவேசிக்க மாட்டார்கள் என்று சாட்சி அளித்தார். தேவனுடைய இளைப்பாறுதல் இன்னமும் கிடைக்க வேண்டியதாக இருந்தது (ஏனென்றால் இஸ்ரவேல் மக்கள் அதை இன்னமும் அனுபவித்திருக்கவில்லை; 4:8) என்பதை அவரது தீர்க்கதரிசனம் சுட்டிக்காண்பித்தது. தாவீது நிகழ்கால வினைச்சொல்லையும் "உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள்" என்று அவர் கூறியபோது "இன்று" என்ற வார்த்தையையும் பயன்படுத்தினார் (சங்கீதம் 95:7, 8) அவரது காலத்தில் இளைப்பாறுதல் கிடைப்பதாக மற்றும் முதல் நூற்றாண்டில் இருந்த கிறிஸ்தவர்களுக்கும் அவை கிடைப்பதாக இருந்தது. மற்றும் அது தொடக்கக்காலக் கிறிஸ்தவர்களுக்குக் கிடைப்பதாக இருந்தது என்றால், இன்றைய நாட்களில் இன்னமும் அது கிடைப்பதாகவே இருக்கும். ஆகையால், இஸ்ரவேல் மக்கள் செய்யத் தவறியிருந்ததைச் செய்வதற்கு நாம் வாய்ப்பைக் கொண்டிருக்கிறோம் என்பதே எபிரெயர் 4:1-10ல் உள்ள விவாதத்தில் எழுத்தாளரின் கருத்தாக உள்ளது. நாம் தேவனுடைய இளைப்பாறுதலில் பிரவேசிக்க முடியும்!

அந்த இளைப்பாறுதல் என்ன? அது "ஓய்வுநாள் இளைப்பாறுதல்" என்று அழைக்கப்பட்டுள்ளது (4:9), ஆனால் அது ஓய்வுநாளாக இருப்பதில்லை. மாறாக அது பரலோகத்தில் இருக்கிறது; நாம் பரலோகத்திற்குச் செல்லும்போதுதான், தேவன் தமது கிரியைகளில் இருந்து ஓய்ந்திருந்தது போல நாமும் நமது கிரியைகளில் இருந்து ஓய்ந்திருப்போம் (4:10; காண்க வெளிப்படுத்தின விசேஷம் 14:13).

இருப்பினும், இஸ்ரவேல் மக்கள் தங்கள் இளைப்பாறுதலில் பிரவேசிக்கத் தவறியது போலவே, கிறிஸ்துவின் சீஷர்களும் பரலோக இளைப்பாறுதலில் பிரவேசிக்கத் தவறக்கூடும். எனவே இப்போதுள்ள கிறிஸ்தவர்களுக்குப் போலவே அப்போதிருந்த கிறிஸ்தவர்களுக்கும் தேவனுடைய புத்தி கூறுதல் தேவைப்பட்டது: "உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள்." 4:11ல் இந்த சகோதரர்கள் எதைச் செய்யும்படி எழுத்தாளர் புத்திகூறினாரோ, அதையே நாம் இன்னமும் செய்வது அவசியமாக உள்ளது: "ஆகையால், அந்தத் திருஷ்டாந்தத்தின்படி, ஒருவனாகிலும் கீழ்ப்படியாமையினாலே விழுந்துபோகாதபடிக்கு, நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்கக்கடவோம்."[2]

## முடிவுரை

*பிரசங்கமானது, புத்திகூறுதல் மற்றும் ஊக்குவிப்பு ஆகியவற்றுடன் முடிவடைகிறது (4:11-13ஐ வாசிக்கவும்): "நாம் இந்த இளைப்பாறுதலில் - அதாவது, பரலோகத்தில் கிறிஸ்தவரின் இளைப்பாறுதலில் - பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்கக்கடவோம்.'' அடுத்த இரண்டு வசனங்களில் ஊக்குவிப்பு அளிக்கப்படுகிறது. இந்த இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்க வேண்டியது ஏன்? ஏனெனில் தேவனுடைய வசனம் "ஜீவனும் வல்லமையும்'' உள்ளதாகவும் கூர்மையானதாகவும் மனிதரின் இருதயங்களை நியாயந்தீர்ப்பதாகவும் இருக்கிறது. 4:12, 13ல் கூறப்பட்டுள்ளது, தேவனுடைய வார்த்தையைப் பொறுத்த மட்டில் எப்போதுமே உண்மையாக இருந்துள்ளது, மற்றும் எனவே அது இன்றைய நாட்களில் தேவனுடைய வார்த்தையான வேதாகமத்தைப் பொறுத்த மட்டிலும் எப்போதும் உண்மையாகவே இருக்கிறது. 3ம் அதிகாரத்தில் தாவீது கூறியதாக மேற்கோள் காண்பிக்கப் பட்டுள்ள உண்மையானது முற்றிலும் உண்மையும் நம்பத் தகுந்ததுமாக உள்ளது என்ற உண்மையின் மீது இந்த வசனத்தின் வலியுறுத்தம் இருக்கலாம். முதல் நூற்றாண்டில் இருந்த கிறிஸ்தவர்கள், தாங்கள் ஜாக்கிரதையாயிருப்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளுதல் அவசியமாக இருந்தது, இல்லையென்றால் அவர்கள் அவிசுவாசமாயிருந்த இஸ்ரவேல் மக்களுக்கு ஏற்பட்ட முடிவில் நிச்சயமாகவே பங்கடைவார்கள்.*

## நடைமுறை பயன்பாடு

*இந்தப் பிரசங்கத்தை நமது வாழ்விற்கு நாம் எவ்வாறு நடைமுறைப் படுத்த முடியும்? நாம் குறைந்த பட்சம் பின்வரும் மூன்று கொள்கைகளைக் கற்றுக்கொள்ள முடியும்:*

*<u>விசுவாச விலக்கத்திற்குச் சாத்தியக்கூறு</u>. சிலருடைய கண்ணோட்டத்திற்கு நேர்மாறாக, விசுவாச விலக்கம் சாத்தியமானதாக உள்ளது. நித்தியத்திற்கும் இழந்து போகப்படும்படி கிறிஸ்தவர்கள் பாவம் செய்யக்கூடும். விசுவாச விலக்கம் சாத்தியமற்றதாக இருந்தது என்றால், எபிரெயருக்கு எழுதிய நிருபம் கருத்து எதையும் ஏற்படுத்தி இருக்காது. கிறிஸ்தவர்களுக்கு, இரட்சிப்பு என்பது நிபந்தனைக்கு உட்பட்டதாக உள்ளது. வனாந்தரத்தில் விழுந்துபோன இஸ்ரவேல் மக்களின் உதாரணம், அந்த உண்மையைத் தெளிவாக்குகிறது.*

*<u>விசுவாச விலக்கத்தின் காரணம்</u>. அவிசுவாசமே விசுவாச விலக்கத்திற்கு அடிப்படைக் காரணம் என்றும் இவ்வசனப் பகுதி போதிக்கிறது. இஸ்ரவேல் மக்களின் விசுவாச விலக்கத்தைப் பற்றி விவரிக்க மாறுபட்ட பல வார்த்தைகள் பயன்படுத்தப் பட்டுள்ளன: அவர்கள் தங்கள் இருதயங்களைக் கடினப் படுத்தினர் மற்றும் தேவனுக்குக் கோபமூட்டினர் (3:8); அவர்கள் தங்கள் இருதயங்களில் வழுவிப் போயினர் (3:10); அவர்கள் பாவம் செய்தனர் (3:17); அவர்கள் கீழ்ப்படியாதிருந்தனர் (3:18; மேலும் காண்க 4:6). இருப்பினும், அவிசுவாசம் என்பதே அவர்களின் முதன்மைப் பிரச்சனையாக இருந்தது: "அவிசுவாசத்தினாலே அவர்கள் அதில் பிரவேசிக்கக்கூடாமற் போனார்கள்" (3:19; மேலும் காண்க 3:12 மற்றும் 4:2). அவர்களின் வரலாற்றை மீண்டும் நினைவுக்குக் கொண்டுவாருங்கள். மற்ற விஷயங்களுக்கு மத்தியில் அவர்கள், செங்கடலை*

எதிர்கொண்டபோது முறுமுறுத்தனர். அவர்கள் தங்களுக்குத் தண்ணீர் இல்லை என்பதால் முறுமுறுத்தனர், அவர்கள் தங்களுக்கு உணவு இல்லை என்பதால் முறுமுறுத்தனர், மற்றும் அவர்கள் பயப்பட்டதால் கானான் நாட்டிற்குள் பிரவேசிக்க மறுத்து விட்டனர். ஒவ்வொரு விஷயத்திலும் அவர்களின் தோல்வியானது விசுவாசத்தில் தவறுதலாகவே இருந்தது! உண்மையில் அவர்கள் கீழ்ப்படியாதவர்களாக இருந்தனர்; ஆனால் அவர்களின் கீழ்ப்படியாமை என்பது அவர்களின் அவிசுவாசத்தின் விளைவாக இருந்தது.

*இதே விஷயம் நம்மைப் பொறுத்த வரையிலும் உண்மையாயிருக்கக் கூடும்:* தேவனுடைய உதவி நமக்குத் தேவை என்பதை நாம் நம்பாமல் நமது இலக்குகளை அடைய நாமே முயற்சி செய்யலாம். தேவன் கூறுவதை அவர் அர்த்தப்படுத்துகிறார் என்பதை நாம் விசுவாசியாமல் போகலாம். விசுவாசக் குறைவு, தேவன் தடைசெய்கிறவற்றைச் செய்யும்படி அல்லது தேவன் கேட்டுக்கொள்பவற்றைச் செய்யத் தவறும்படி நம்மை வழிநடத்தலாம். அவிசுவாசம் என்பது விசுவாச விலக்கத்திற்கு அடிப்படைக் காரணமாக உள்ளது.

*விசுவாச விலக்கத்தைத் தடை செய்தல்.* இவ்வசனப் பகுதியில் இருந்து நாம், விசுவாச விலக்கத்தைத் தடை செய்வது எப்படி என்றும் கற்றுக்கொள்ள முடியும். விழுந்துபோவதைத் தவிர்க்க, மூன்று வழிகள் உள்ளன என்று இவ்வசனப் பகுதி போதிக்கிறது: (1) "... பயந்திருக்கக்கடவோம்" (4:1). விழுந்துபோவதிலிருந்து நம்மைத் தடைசெய்வதற்கு, நாம் அவ்வாறு விழுந்துபோகக் கூடும் என்று அறிந்திருக்க வேண்டும் மற்றும் விசுவாச விலக்கத்தின் விளைவுகள் பற்றிப் பயந்திருக்க வேண்டும். (2) "ஜாக்கிரதையாயிருக்கக்கடவோம்" (4:11). விழுந்துபோவதைத் தவிர்க்க, உண்மையுள்ளவர்களாக நிலைத்திருப்பதற்கு - நாம் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும் - நம்மால் இயன்ற அளவுக்குச் சிறப்பானவற்றை நாம் செய்ய வேண்டும். (3) "ஒருவருக்கொருவர் புத்திசொல்லுங்கள்" (3:13). விழுந்து போவதில் இருந்து நம்மை காத்துக்கொள்வதற்கு, விசுவாசத்தில் நிலைத்திருக்கும்படி ஒருவர் மற்றவருக்குப் புத்திசொல்லி ஊக்கமூட்டுதல் அவசியமாக உள்ளது மற்றும் கர்த்தரிடத்தில் நிலைத்திருக்கும்படி நம்மை ஊக்குவிக்க நாம் மற்றவர்களை அனுமதிக்க வேண்டும். *மீண்டுமாக, விழுந்து போவதில் இருந்து நம்மைக் காத்துக்கொள்வதற்கு, நமக்கு மூன்று விஷயங்கள் தேவைப்படுகின்றன: (1) விசுவாச விலக்கத்திற்கு சாத்தியக்கூறு உள்ளது என்று அறிந்திருத்தல், (2) தனிப்பட்ட ஜாக்கிரதை மற்றும் (3) பரஸ்பரம் புத்தி கூறுதல்.*

## முடிவுரை

எபிரெயருக்கு எழுதிய நிருபத்தின் முதல் வாசகர்களில் சிலரைப் போல, நீங்கள் கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து விழுந்து போயிருந்தால், நீங்கள் பின்வருவதை அறிந்திருத்தல் அவசியமாகும்: நீங்கள் தேவனிடத்தில் திரும்ப இயலாத அளவுக்கு, அவரிடத்தில் இருந்து வெகுதூரத்தில் ஒருக்காலும் விழுந்து போக முடியாது! நீங்கள் உங்கள் பாவங்களுக்காக மனந்திரும்பும் பட்சத்தில் தேவன் உங்களைத் திரும்ப எடுத்துக்கொள்வார் - நீங்கள் எவ்வளவு தொலைவில் விழுந்து போயிருக்கிறீர்கள் என்பது ஒரு பொருட்டே அல்ல! திரும்ப வருவதற்கு உங்கள் பாவங்களில் இருந்து மனந்திரும்புதல் (நடபடிகள் 8:22), உங்கள்

*பாவங்களை அறிக்கையிடுதல் (1 யோவான் 1:9) மற்றும் உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காக ஜெபித்தல் (நடபடிகள் 8:22; மேலும் காண்க யாக்கோபு 5:16) என்பவையே, நீங்கள் செய்ய வேண்டிய எல்லாமுமாக உள்ளன. நீங்கள் விழுந்து போயிருந்தால், கெட்ட குமாரனின் (லூக்கா 15) உதாரணத்தைப் பின்பற்றி இன்றே உங்கள் பிதாவினிடத்திற்குத் திரும்பி வாருங்கள்!*

---

குறிப்புகள்

*[1]இவ்வசனப்பகுதி மேலே குறிப்பிடப்பட்டுள்ள சங்கீதங்களின் வசனப்பகுதியில் இருந்து மேற்கோள் காண்பித்து, "இன்று என்னப்படுமளவும்" என்பதைக் கூட்டுகிறது. "இன்று" என்று எவ்வளவு நேரம் அழைக்கப்படுகிறது? சங்கீதம் 95 மற்றும் எபிரெயர் 3 ஆகியவற்றின் நிலைப்பாட்டில் இருந்தும், தேவனுடைய நிலைப்பாட்டில் இருந்தும் பார்க்கையில், இது எப்போதுமே "இன்று" என்பதாகவே உள்ளது; ஆகையால், நாம் எப்போதுமே ஒருவர் மற்றவரை ஊக்கப்படுத்த வேண்டும். [2]இஸ்ரவேல் மக்களின் உதாரணத்தைக் கிறிஸ்தவர்கள் பின்பற்றக்கூடாது என்ற எச்சரிக்கையுடன், வனாந்தரத்தில் இஸ்ரவேல் மக்களின் விசுவாச விலக்கம் பற்றிய உதாரணத்தின் இதேபோன்ற ஒரு பயன்பாட்டிற்கு, 1 கொரிந்தியர் 10:1-12ஐக் காணவும்.*